ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2018.10.08 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2018 யூலை

**பொதுநோக்கு**

இலங்கையின் வெளிநாட்டுத் துறை, 2018 யூலையில் மிதமான செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தது. ஏற்றுமதி வருவாய்கள் மாதகாலத்தில் ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சியதற்கு மத்தியில் உயர் இறக்குமதிச் செலவினத்துடன் 2018 யூலையில் வர்த்தகப் பற்றாக்குறை (ஆண்டிற்கு ஆண்டு) தொடர்ந்தும் விரிவடைந்தது. சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் மிதமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சிறிதளவால் மாதகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. நிதியியல் கணக்கு, யூலையில் மிதமான உட்பாய்ச்சலினை பதிவுசெய்த அதேவேளை, கடன் தீர்த்தல் தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய வெளிப்பாய்ச்சல்கள் என்பன 2018 யூலை இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 8.4 பில்லியனுக்கு வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையானது அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் மற்றும் இறக்குமதிகளுக்காக அதிகரிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கேள்வி என்பவற்றுடன் தொடர்ந்தும் அழுத்தத்தின் கீழ் காணப்பட்டதுடன் செலாவணி வீதத்தில் நாளுக்குள்ளான மிகைத் தளம்பலினைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கியின் தலையீட்டினை அவசியப்படுத்தியது.

## அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | யூலை 2017 ஐ.அ.டொ. மில் | யூலை 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சனவரி - யூலை 2017 ஐ.அ.டொ. மில் | சனவரி - யூலை 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 1,015 | 1,073 | 5.7 | 6,413 | 6,805 | 6.1 |
| இறக்குமதிகள் | 1,591 | 1,754 | 10.3 | 11,740 | 13,196 | 12.4 |
| வர்த்தக மீதி (தேறிய) | -576 | -681 | | -5,327 | -6,391 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 381 (ஆ) | 404 (இ) | 6.0 | 2,255 (ஆ) | 2,564 (இ) | 13.7 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 629 (ஈ) | 619 | -1.6 | 4,220 (ஈ) | 4,243 | 0.5 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (உ) | 23 | -3 | | 253 | 50 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 289 | 72 | | 3,658 | 3,942 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 204 | 29 | | 934 | 582 | |
| நீண்ட காலக் கடன்கள் | 86 | 43 | | 774 | 860 | |
| கூட்டுக் கடன்கள் | - | - | | 450 | - | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறி | - | - | | 1,500 | 2,500 | |
| ப.நா.நி – விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகளின் பெறுகைகள் | 167 | - | | 167 | 252 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (ஊ) | | | | 567 | 1,353 | |
| **திரண்ட நிலுவை** | | | | **1,449** | **554** | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை.

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2017 இற்கான நாளொன்றிற்கான தங்கியிருக்கும் காலம் மற்றும் சராசரிச் செலவு மதிப்பீடுகள் பற்றி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டது.

(இ) 2018 இற்கான அதன் அளவீட்டுப் பெறுபேறுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடு திருத்தம் செய்யப்படலாம்.

(ஈ) திருத்தப்பட்டது.


(உ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஊ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் ஆறு மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

### வர்த்தக நிலுவை

இறக்குமதிகளின் உயர் வளர்ச்சி காரணமாக வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறையானது 2017 யூலையுடன் ஒப்பிடுகையில் 2018 யூலையில் தொடர்ந்தும் விரிவடைந்தது. திரட்டிய அடிப்படையில் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது 2017இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதல் ஏழு மாதங்களின் போது குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது.


**வரைபடம் 1: மாதாந்த வர்த்தக நிலுவை**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

வரைபடம் 2: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

வணிகப் பொருள் ஏற்றுமதி வருவாய்கள் 2018 யூலையில் தொடர்ச்சியாக இரண்டாவது மாதகாலமாக ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சியிருந்தது. அதற்கமைய, ஏற்றுமதிகளில் இருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,073 மில்லியனாக 5.7 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தன. கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்த ஏற்றுமதி வருவாய்களுக்கு பங்களித்த அதேவேளை வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் குறைவான செயலாற்றத்தினை மாதகாலத்தில் பதிவுசெய்தன. கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ், நீர்கல மற்றும் வானூர்தி எரிபொருட்களின் உயர் ஏற்றுமதிகளின் விலைகளின் காரணமாக பெற்றோலிய உற்பத்திகள் மீதான ஏற்றுமதி வருவாய்கள் அளவுக் குறைப்புகளுக்கு மத்தியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள், மாதகாலத்தில் சிங்கப்பூரிற்கான பயணிகள் கப்பல் ஏற்றுமதியின் காரணமாக கணிசமாக அதிகரித்தன. அநேகமாக அனைத்து உப வகைகளிலும் பதிவாகிய அதிகரிப்பினைப் பிரதிபலித்து, பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்களிலிருந்தான வருவாய்கள் 2018 யூலையில் கணிசமாக அதிகரித்தன. இதற்கு மேலதிகமாக, உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், இரசாயனப் பொருட்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் அணிகலன்கள் அத்துடன் விலங்குத்தீன் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் கைத்தொழில் சார்ந்த ஏற்றுமதிகளினை நோக்கி பங்களிப்புச் செய்து 2018 யூலையில் அதிகரித்தன. எவ்வாறாயினும், புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள், ஐக்கிய அமெரிக்கா மற்றும் மரபுசாரா சந்தைகளான கனடா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் அவுஸ்திரேலியா போன்றவற்றின் கேள்வியின் வீழ்ச்சி மற்றும் 2017 யூலையில் பிரதிபலித்த கணிசமான உயர் ஏற்றுமதி வருவாய்களைப் பிரதிபலித்த தளத்தாக்கத்தின் காரணமாக 2018 யூலையில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, மாதகாலத்தில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் காய்கறிகள் மற்றும் சிறுவேளாண்மை ஏற்றுமதிகள் தவிர்ந்த அநேகமான அனைத்து வகைகளிலும் குறைவான செயலாற்றுகையின் காரணமாக குறைவடைந்தன. தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள், விலைகள் மற்றும் அளவுகளில் வீழ்ச்சியின் காரணமாக குறைவடைந்த அதேவேளை, தேங்காய் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் இவ்வுற்பத்திகளுக்காக அறிக்கையிடப்பட்ட உயர்வான விலைகளுக்கு மத்தியிலும் குறைவான ஏற்றுமதி அளவுகளின் பயனாக அனைத்து தோல் நீக்கிய வகைகளினதும் குறைவின் காரணமாக வீழ்ச்சியடைந்தன. இலங்கையின் வணிகப் பொருள் ஏற்றுமதிக்கான முன்னணிச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 48 சதவீதத்திற்கு வகைகூறின.

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்து வருவாய்கள்(அ)


| வகை | யூலை 2017 (ஐ.அ.டொ. மில்) | யூலை 2018 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | யூலை - ஏப்பிறல் 2017 (ஐ.அ.டொ. மில்) | யூலை - ஏப்பிறல் 2018 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **756.6** | **843.6** | **11.5** | **4,822.4** | **5,277.3** | **9.4** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 33.5 | 38.8 | 15.7 | 224.3 | 271.1 | 20.8 |
| விலங்குத்தீன் | 4.6 | 11.9 | 157.8 | 45.2 | 66.0 | 46.1 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 466.6 | 465.6 | (0.2) | 2,850.2 | 2,984.6 | 4.7 |
| இதில் ஆடைகள் | 441.1 | 435.2 | (1.3) | 2,685.8 | 2,786.0 | 3.7 |
| புடவைகள் | 18.4 | 22.6 | 22.8 | 118.1 | 143.2 | 21.2 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 7.2 | 7.9 | 10.1 | 46.3 | 55.4 | 19.6 |
| இறப்பர் உற்பத்திகள் | 78.5 | 77.4 | (1.5) | 467.1 | 503.8 | 7.9 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 17.4 | 19.4 | 11.5 | 141.4 | 170.9 | 20.9 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 29.1 | 38.4 | 32.1 | 209.5 | 258.3 | 23.3 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.7 | 31.4 | 368.2 | 131.7 | 82.4 | (37.4) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 35.7 | 68.8 | 93.0 | 212.6 | 340.9 | 60.3 |
| இரசாயன உற்பத்திகள் | 13.7 | 17.0 | 24.2 | 83.9 | 98.8 | 17.7 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 11.5 | 11.1 | (3.5) | 79.0 | 81.5 | 3.2 |
| அச்சிடல் பொருட்கள் மற்றும் எழுதுகருவிகள் | 6.3 | 4.2 | (32.8) | 24.0 | 14.4 | (39.9) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 12.8 | 13.1 | 2.6 | 90.5 | 90.6 | 0.2 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.5 | 5.6 | 1.4 | 41.3 | 44.2 | 6.8 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 9.5 | 14.7 | 54.2 | 60.9 | 91.7 | 50.6 |
| இரசாயன உற்பத்திகள் | 3.2 | 2.7 | (17.8) | 19.2 | 17.3 | (10.0) |
| ஏனையவை | 22.0 | 23.5 | 6.9 | 141.6 | 160.7 | 13.5 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **253.3** | **225.7** | **(10.9)** | **1,559.7** | **1,498.0** | **(4.0)** |
| தேயிலை | 143.0 | 125.2 | (12.4) | 871.4 | 854.2 | (2.0) |
| இறப்பர் | 2.1 | 1.6 | (25.1) | 26.1 | 20.3 | (22.0) |
| தேங்காய் | 32.5 | 28.2 | (13.3) | 206.3 | 178.3 | (13.6) |
| வாசனைத்திரவியம் | 37.7 | 34.3 | (9.1) | 198.4 | 184.0 | (7.3) |
| மரக்கறிகள் | 2.3 | 3.5 | 51.6 | 16.9 | 16.0 | (5.3) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.6 | 3.0 | (16.5) | 20.0 | 19.8 | (0.9) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 11.8 | 11.9 | 1.2 | 83.2 | 74.0 | (11.0) |
| கடலுணவு | 20.3 | 18.0 | (11.2) | 137.4 | 151.4 | 10.2 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **5.3** | **3.9** | **(26.0)** | **30.6** | **29.8** | **(2.9)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,015.2** | **1,073.2** | **5.7** | **6,412.7** | **6,805.0** | **6.1** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

**வரைபடம் 3: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,754 மில்லியனாக 10.3 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தது. ஆண்டிற்கு அடிப்படையில் முக்கிய வகைகளிலும் ஏற்பட்ட அதிகரித்த செலவினம் அதேபோன்று 2017இல் குறைந்த தளத்தாக்கம் என்பன இவ்வளர்ச்சிக்குப் பங்களித்தன. இடைநிலைப் பொருட்களின் கீழ், எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினமானது மசகுஎண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் என்பவற்றின் உயர்வான இறக்குமதி விலைகளின் காரணமாக மாதகாலத்தில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் மீதான செலவினம், நூல் மற்றும் துணி இறக்குமதிகள் மீதான உயர் செலவுகளின் காரணமாக 2018 யூலையில் அதிகரித்தது. அதேவேளை, அடிப்படை உலோகங்கள் மீதான இறக்குமதிச் செலவினம், இரும்பு மற்றும் உருக்கு இறக்குமதிகள் மீது உறப்பட்ட உயர் செலவினத்தின் காரணமாக மாதகாலத்தில் அதிகரித்தது. மேலும், இரசாயன உற்பத்திகள், பிளாத்திக் மற்றும் பிளாத்திக் பொருட்கள், வளமாக்கிகள் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை போன்றவற்றின் இறக்குமதிச் செலவினம், 2018 யூலையில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளில் அதிகரிப்புக்கு பங்களித்தது. எவ்வாறாயினும், தங்க இறக்குமதிகள் மீதான 15 சதவீத சுங்கத் தீர்வை விதிப்பின் தாக்கத்தினைப் பிரதிபலித்து தங்க இறக்குமதி மீதான செலவினம், 2018 யூலையில் தொடர்ச்சியாக மூன்றாவது மாதமாக கணிசமாக வீழ்ச்சியடைந்தது அத்துடன் மாதகாலத்தில் கோதுமை மற்றும் சோளம் மற்றும் உணவுத் தயாரிப்புக்கள் மீதான செலவினம் இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினத்தினைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்து வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நுகர்வோர் பொருட்கள் இறக்குமதிகள், தனிப்பட்ட ஊர்திகள் குறிப்பாக, 1,000 சிலிண்டர் கொள்ளளவிற்குக் குறைந்த கார்கள், கலப்பு மற்றும் மின்சார மோட்டார் கார்கள் என்பவற்றின் உயர்வான இறக்குமதிகளின் பிரதான காரணமாக அதிகரித்தன. சிறிய ஊர்திகளின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு இவ்வகை மீதான ஏற்புடைய வரிகள் 2018 ஓகத்து 01 தொடக்கம் செயற்படத்தக்கவாறு மேல்நோக்கித் திருத்தப்பட்டன. மேலும், வர்த்தக ரீதியற்ற வாகன இறக்குமதிகள் மீதான நாணயக் கடிதங்களுக்கெதிரான 100 சதவீத எல்லை வைப்புத்தேவைபாடு 2018 செத்தெம்பர் 19 முதல் செயற்படத்தக்கவாறு விதிக்கப்பட்டது. அதிகரித்த இறக்குமதிகளிலிருந்தான சென்மதி நிலுவையின் மீதான தொடர்ச்சியான அழுத்தத்தினைப் பரிசீலனையில் கொண்டு அரசாங்கமும் மத்திய வங்கியும் ஊர்தி இறக்குமதி மற்றும் சில அத்தியவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதியினை மட்டுப்படுத்துவதற்கு மேலும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தின. எவ்வாறாயினும், பெரும்போகத்தின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ஆரோக்கியமான அறுவடையின் காரணமாக குறைந்தளவான அரிசி இறக்குமதிகளின் விளைவாக 2018 யூலையில் உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதிச் செலவினமானது பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் கட்டடப் பொருட்கள் மற்றும் போக்குவரத்துக் கருவிகளின் உயர்வான இறக்குமதிகளின் விளைவாக அதிகரித்தது. 2018 யூலையில் இந்தியா, சீனா, ஐக்கிய அரபு இராச்சியம், யப்பான் மற்றும் சிங்கப்பூர் என்பன முக்கிய இறக்குமதி மூலங்களாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 62 சதவீதத்திற்கு வகைகூறின.

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவினம்(அ)

| வகை | யூலை 2017 (ஐ.அ.டொ. மில்) | யூலை 2018 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | யூலை - ஏப்பிறல் 2017 (ஐ.அ.டொ. மில்) | யூலை - ஏப்பிறல் 2018 (ஐ.அ.டொ .மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **334.5** | **389.4** | **16.4** | **2,556.3** | **3,010.1** | **17.8** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 133.1 | 112.5 | (15.5) | 1,056.6 | 1,019.5 | (3.5) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 24.2 | 1.8 | (92.6) | 162.3 | 111.5 | (31.3) |
| இதில் அரிசி | 23.3 | 0.4 | (98.4) | 155.1 | 100.5 | (35.2) |
| மரக்கறிகள் | 26.2 | 25.1 | (4.0) | 202.9 | 195.1 | (3.8) |
| பால் உற்பத்திகள் | 19.6 | 23.6 | 20.5 | 180.0 | 190.3 | 5.7 |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 18.9 | 19.1 | 0.8 | 169.6 | 171.9 | 1.4 |
| கடலுணவு | 18.3 | 12.1 | (33.9) | 129.1 | 116.7 | (9.6) |
| வாசனைத் திரவியங்கள் | 5.6 | 10.2 | 81.3 | 56.3 | 62.1 | 10.2 |
| எண்ணெய் மற்றும் கொழுப்பு | 2.8 | 4.1 | 43.1 | 27.4 | 31.2 | 14.2 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 17.5 | 16.5 | (5.5) | 129.1 | 140.6 | 8.9 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 201.3 | 276.9 | 37.5 | 1,499.7 | 1,990.6 | 32.7 |
| தனிப்பட்ட ஊர்திகள் | 62.2 | 137.0 | 120.4 | 432.4 | 949.7 | 119.7 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 41.7 | 40.9 | (1.8) | 290.4 | 299.7 | 3.2 |
| அச்சிட்ட பொருட்கள் மற்றும் காகிதாதிகள் | 2.7 | 3.8 | 42.9 | 20.1 | 22.2 | 10.2 |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 22.4 | 24.4 | 9.2 | 221.2 | 189.5 | (14.3) |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 18.6 | 18.1 | (3.0) | 146.9 | 138.1 | (6.0) |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாடங்கள் | 16.9 | 13.1 | (22.7) | 98.6 | 97.2 | (1.4) |
| இறப்பர் உற்பத்திகள் | 7.6 | 9.0 | 19.1 | 52.3 | 54.3 | 3.7 |
| அழகுசாதனங்கள் மற்றும் மலசலகூடப் பொருட்கள் | 5.5 | 4.7 | (14.4) | 48.9 | 40.7 | (16.8) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 23.8 | 25.8 | 8.5 | 188.8 | 199.2 | 5.5 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **901.8** | **975.3** | **8.1** | **6,250.9** | **7,295.2** | **16.7** |
| எரிபொருள் | 215.9 | 276.6 | 28.1 | 1,840.4 | 2,370.2 | 28.8 |
| இதில் மசகெண்ணெய் | 34.8 | 55.1 | 58.3 | 314.2 | 486.4 | 54.8 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 180.7 | 221.5 | 22.6 | 1,355.0 | 1,736.6 | 28.2 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 72.1 | 13.3 | (81.6) | 400.1 | 508.4 | 27.1 |
| இதில் தங்கம் | 62.4 | 0.1 | (99.8) | 337.4 | 437.9 | 29.8 |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 236.9 | 249.6 | 5.3 | 1,543.9 | 1,610.1 | 4.3 |
| அடிப்படை உலோகங்கள் | 48.8 | 91.9 | 88.3 | 300.7 | 381.0 | 26.7 |
| இரசாயண உற்பத்திகள் | 66.8 | 78.5 | 17.6 | 475.0 | 524.6 | 10.4 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 48.8 | 58.8 | 20.5 | 351.4 | 411.8 | 17.2 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 26.1 | 24.8 | (4.9) | 168.3 | 151.3 | (10.1) |
| ஊர்திகள் மற்றும் இயந்திரப் பாகங்கள் | 23.6 | 23.2 | (2.0) | 171.5 | 175.2 | 2.2 |
| கோதுமை மற்றும் சோளம் | 31.4 | 19.0 | (39.5) | 193.9 | 212.1 | 9.4 |
| உணவுத் தயாரிப்புக்கள் | 30.6 | 18.1 | (40.9) | 177.4 | 180.3 | 1.7 |
| வளமாக்கி | 10.6 | 17.6 | 66.1 | 49.7 | 138.7 | 179.1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தயாரிக்கப்படாத புகையிலை | 4.7 | 12.8 | 173.7 | 31.7 | 44.5 | 40.3 |
| ஏனையவை | 85.5 | 91.1 | 6.6 | 547.0 | 587.0 | 7.3 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **351.9** | **386.3** | **9.8** | **2,799.0** | **2,818.7** | **0.7** |
| பொறி மற்றும் கருவிகள் | 195.0 | 216.4 | 11.0 | 1,514.0 | 1,480.3 | (2.2) |
| கட்டடப் பொருட்கள் | 111.3 | 119.6 | 7.5 | 900.9 | 878.8 | (2.5) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 45.1 | 50.0 | 10.8 | 378.9 | 455.9 | 20.3 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.5 | 0.4 | (31.9) | 5.3 | 3.7 | (29.6) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **3.0** | **3.5** | **18.1** | **133.9** | **71.5** | **(46.6)** |
| **மொத்த இறக்குமதி** | **1,591.1** | **1,754.5** | **10.3** | **11,740.1** | **13,195.5** | **12.4** |

(அ) தற்காலிகமானவை


மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

**நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்**

ஆண்டு காலப்பகுதியில் யூலை மாதமானது சுற்றுலாப் பயணிகளுக்கான மரபு சார்ந்த பருவகாலமல்லாத காலப்பகுதியாக இருந்தபோதிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2018 யூலையில் 217,829 ஆக 6.0 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்தது. 2018இன் முதல் ஏழு மாதங்களில் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2017 இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையின் 13.7 சதவீத வளர்ச்சியொன்றுடன் 1,382,476ஆக இருந்தது. 2018 யூலையில் சுற்றுலாத் துறைகளிலிருந்தான வருவாய்கள் 2018இன் முதல் ஏழுமாத காலப்பகுதியின் போது ஐ.அ.டொலர் 2,564 மில்லியன் தொகையுடைய திரண்ட வருவாய்களுடன் ஐ.அ.டொலர் 404 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியா, ஐக்கிய இராச்சியம், நெதர்லாந்து, அவுஸ்திரேலியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சி அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகளுக்கு பங்களித்தது.


அதேவேளை, தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018 யூலையில் ஐ.அ.டொலர் 619 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு 1.6 சதவீதத்தினால் மிதமான வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. இதன்விளைவாக, 2017 யூலை வரை தொழிலாளர் பணவனுப்பல்கள் திரண்ட அடிப்படையில் ஐ.அ.டொலர் 4,243 மில்லியனுக்கு 0.5 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியடைந்தது.

**வரைபடம் 4: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 5: சுற்றுலாவிலிருந்தான வருகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,
உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்,
இலங்கை மத்திய வங்கி


**நிதியியல் பாய்ச்சல்கள்**

முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தை இரண்டினதும் வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்கள் உள்ளிட்ட கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலான வெளிநாட்டு முதலீடுகள், 2018 யூலையில் ஐ.அ.டொலர் 3 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தது. இதன் விளைவாக, 2018இன் முதல் ஏழு மாதகாலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான திரண்ட உட்பாய்ச்சலானது, காலப்பகுதியின் போது இரண்டாந்தரச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 16 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சலுடனும் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 66 மில்லியன் உட்பாய்ச்சலொன்றுடன் ஐ.அ.டொலர் 50 மில்லியனாகவிருந்தது. உலக நிதியியல் சந்தைகளில் குறிப்பாக, பெடரல் ரீசேவ் வங்கியின் கொள்கை வீதங்களில் அதிகரிப்பொன்றினை விளைவித்த ஐக்கிய அமெரிக்கப் பொருளாதார வலுப்படுத்தலில் ஏற்பட்ட அண்மைக்கால முன்னேற்றங்கள், வளர்ந்து வரும் பொருளாதாரங்களின் மூலதனச் சந்தைகளிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சலுக்கு வழிவகுத்தது. இத்தாக்கம் குறிப்பாக, 2018இன் மூன்றாம் காலாண்டிலிருந்து இலங்கையிலும் உணரப்பட்டதுடன் அரசாங்க பிணையச் சந்தையிலிருந்தான தொடர்ச்சியான வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களுக்கு வழிவகுத்தது. இதன் விளைவாக, அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலான வெளிநாட்டு முதலீடுகள் 2018இன் யூலையில் ஐ.அ.டொலர் 53 மில்லியன்கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றை பதிவுசெய்திருந்ததுடன் ஐ.அ.டொலர் 229 மில்லியன்கொண்ட திரண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றிற்கு 2018இன் முதல் ஏழு மாதகாலப்பகுதியில் இட்டுச்சென்றிருந்தது.

**பன்னாட்டு ஒதுக்குகள்**

2018இன் யூலை இறுதியில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 8.4 பில்லியனாக 4.5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாக மதிப்பிடப்பட்டிருந்தன. இதன் விளைவாக, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்குகின்ற மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2018 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 10.8 பில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்ததுடன் இது 5.8 இறக்குமதிகளுக்கு சமமானதாகவிருந்தது.

**வரைபடம் 6: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

2018 ஒத்தோபர் 08 வரையான காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 10.2 சதவீதத்தினால் தேய்வடைந்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலித்து இலங்கை ரூபா இக்காலப்பகுதியின் போது இந்தியா ரூபா தவிர ஏனைய பிரதான நாணயங்களுக்கெதிராக தேய்வடைந்திருந்தது. ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் தேய்வானது, அநேகமான உலகளவில் ஐ.அ.டொலரின் பொதுவான வலுப்படுத்தலொன்றினைப் பிரதிபலிக்கின்றது.

**வரைபடம் 7: ஐ.அ.டொலரொன்றிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2017 | 2018 ஒத் 08 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -2.0% | -10.2% |
| யூரோ | -13.5% | -6.9% |
| பவுண் ஸ்ரேலிங் | -10.5% | -8.0% |
| யப்பானிய யென் | -5.1% | -9.4% |
| கனேடியன் டொலர் | -8.6% | -7.4% |
| அவுஸ்திரேலிய டொலர் | -9.0% | -0.8% |
| இந்தியன் ரூபா | -7.5% | +3.3% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி